


04.06.2024

தலைப்புச் செய்திகள்

1. 18ஆவது மக்களவைக்கு நடைபெற்ற தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி முன்னிலை வகித்து வருகிறது.

2. பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோடி வாரணாசியிலும்,

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு.ராகுல்காந்தி வயநாடு, ரேபரேலி தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளனர்.

3. ஆந்திர மாநில சட்டப்பேரவை தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி அறுதி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை கைப்பற்றும் நிலையில் உள்ளது.

ஒடிஷா சட்டப்பேரவையில் பிஜேபி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

4. தமிழ்நாட்டில் 39 மக்களவை தொகுதிகளில் திமுக கூட்டணி 37 இடங்களிலும், அஇஅதிமுக பிஜேபி கூட்டணி தலா 1 இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

5. கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் முன்னிலையில் உள்ளது.

6. இந்தோனேசியன் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு லக்ஷயா சென் முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

ழூழூழூழூழூழூழூழூ

தேர்தல்

நாடுமுழுவதும் 543 மக்களவை தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வரும் நிலையில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

இதுவரை கிடைத்துள்ள நிலவரங்களின் படி மொத்தமுள்ள 543 மக்களவை தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி 293 இடங்களிலும், ஐ.டேனு.ஐ கூட்டணி 230 இடங்களிலும்

இதர கட்சிகள் 19 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன.

பிஜேபி தனித்து 241 இடங்களிலும்

காங்கிரஸ் தனித்து 97 இடங்களிலும் முன்னிலை வகிக்கின்றன.

பிரதமர் திரு.நரேந்திரமோடி வாரணாசி தொகுதியில் தொடர்ந்து முன்னிலை வகிக்கிறார்.

காங்கிரஸ் வேட்பாளர் திரு.ராகுல் காந்தி வயநாடு தொகுதியில் 2 லட்சத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறும் நிலையில் உள்ளார்.

ரேபரேலி தொகுதியிலும் தொடர்ந்து அவர் முன்னிலையில் உள்ளார்.

மத்திய அமைச்சர் திரு.அமித்ஷா காந்தி நகர் தொகுதியிலும்

ஜோதிர் ஆதித்ய சிந்தியா குனா தொகுதியிலும்

பியூஷ் கோயல் வடக்கு மும்பையிலும் முன்னிலையில் உள்ளனர்.

பிஜேபியின் ஸ்மிருதி இராணி அமேதி தொகுதியிலும்,

மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் நீலகிரியிலும்,

மத்திய அமைச்சர் முரளிதரன் ஆட்டிங்கல் தொகுதியிலும்,

டாக்டர் தமிழிசை சௌந்தர்ராஜன் தென் சென்னை தொகுதியிலும்,

தேசிய மாநாட்டு வேட்பாளர் உமர் அப்துல்லா பாராமுல்லாவிலும்,

திரிணாமுல் காங்கிரஸின் சத்ருகன் சின்ஹா அசன்சால் தொகுதியிலும் பின்தங்கியுள்ளனர்.

மத்தியபிரதேசத்தில் மொத்தமுள்ள 29 தொகுதிகளிலும் பிஜேபி தொடர்ந்து முன்னிலையில் உள்ளது.

குஜராத்தில் மொத்தமுள்ள 26 தொகுதிகளில் சூரத் மக்களவை தொகுதியில் பிஜேபி வெற்றி பெற்றுள்ளதோடு, 23 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.

2 தொகுதிகளில் காங்கிரஸ் முன்னிலை வகிக்கிறது.

உத்திபிரதேசத்தில் மொத்தமுள்ள 80 இடங்களில் பிஜேபி 36 இடங்களிலும்

சமாஜ்வாடி 33 இடங்களிலும்

காங்கிரஸ் 8 இடங்களிலும்

ராஷ்டிரிய லோக்தல் 2 இடங்களிலும்

ஆசாத் சமாஜ் கட்சி 1 இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

வாரணாசி தொகுதியில் பிரதமர் திரு.நரேந்திரமோடி,

லக்னோவில் திரு.ராஜ்நாத்சிங், முன்னிலையில் உள்ளனர்.

பஞ்சாபில் மொத்தமுள்ள 13 இடங்களில் பிஜேபி 3 இடங்களிலும்

காங்கிரஸ் 5 இடங்களிலும்

ஆம் ஆத்மி 2 இடங்களிலும்

ஷிரோமணி அகாலிதல் 1 இடத்திலும்,

சுயேட்டைசள் 2 இடங்களிலும் முன்னிலையில் உள்ளனர்.

மஹாராஷ்டிர மாநிலத்தில் முன்னனி நிலவரங்கள் தெரியவந்துள்ள 48 இடங்களில்

பிஜேபி 12 இடங்களிலும்

காங்கிரஸ் 11 இடங்களிலும்

சிவசேனா உத்தவ் தாக்கரே 9 இடங்களிலும்

சிவசேனா 7 இடங்களிலும்

தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் 7 இடங்களிலும்

தேசியவாத காங்கிரஸ், 1 இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

மகராஷ்டிராவில் பிஜேபி வேட்பாளர்கள் நிதின்கட்காரி நாக்பூரிலும்,

பியூஷ் கோயல் வடக்கு மும்பையிலும் முன்னிலையில் உள்ளனர்.

ஹரியானாவில் மொத்தமுள்ள 10 தொகுதிகளில் பிஜேபி 4 இடங்களிலும்

காங்கிரஸ் 6 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன.

சண்டிகடில் உள்ள ஒரே மக்களவை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் மணீஷ் திவாரி முன்னிலை வகித்து வருகிறார்.

டெல்லியில் உள்ள 7 மக்களவை தொகுதிகளில் பிஜேபி முன்னிலையில் உள்ளது.

லடாக் மக்களவை தொகுதியில் சுயேட்சை வேட்பாளர் ஹாஜி அனீஃபா முன்னிலையில் உள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் மொத்தமுள்ள 5 இடங்களில்

பிஜேபி 2 இடங்களிலும்,

தேசிய மாநாட்டு கட்சி 2 இடங்களிலும்,

சுயேட்சை 1 இடத்திலும் முன்னிலையில் உள்ளது.

சட்டிஸ்கட்டில் 11 தொகுதிகளில்

பிஜேபி 10 இடங்களிலும், காங்கிரஸ் 1 இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

ஹிமாச்சல பிரதேசத்தில் 4 மக்களவை தொகுதிகளிலும் பிஜேபி முன்னிலையில் உள்ளது.

மத்திய அமைச்சர் திரு.அனுராக்சிங் தாக்கூர் ஹமீர்பூர் தொகுதியில் முன்னிலையில் உள்ளார்.

ஆந்திராவில் மொத்தமுள்ள 25 மக்களவை தொகுதியில்:

தெலுங்குதேசம் 16 இடங்களிலும்,

ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் 4 இடங்களிலும்,

பிஜேபி 3 இடங்களிலும்,

ஜனசேனா 2 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன.

தெலங்கானா மாநிலத்தில் மொத்தமுள்ள 17 மக்களவை தொகுதிகளில்

பிஜேபி 8 இடங்களிலும்,

காங்கிரஸ் 8 இடங்களிலும்

இதர கட்சிகள் 1 இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

கர்நாடகாவில் மொத்தமுள்ள 28 மக்களவை தொகுதிகளில்

பிஜேபி 16 இடங்களிலும்

காங்கிரஸ் 10 இடங்களிலும்

ஜனதாதள் 2 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன.

பீகார் மாநிலத்தில் மொத்தமுள்ள 40 மக்களவை தொகுதிகளில்

ஐக்கிய ஜனதாதள் 15 இடங்களிலும்

பிஜேபி 13 இடங்களிலும்,

லோக் ஜன்சக்தி 5 இடங்களிலும்,

ராஷ்டிரிய ஜனதாதள் 3 இடங்களிலும்,

ஹிந்துஸ்தானி அவாம் மோர்சா, காங்கிரஸ் தலா 1 இடத்திலும்,

ஊீஜ (ஆடு) 2 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன.

கேரளாவில் மொத்தமுள்ள 20 தொகுதிகளில்

பிஜேபி 1 இடத்திலும்,

காங்கிரஸ் கூட்டணி 18 இடங்களிலும்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், 1 இடத்திலும், முன்னிலையில் உள்ளன.

திரிசூர் தொகுதியில் பிஜேபி வேட்பாளர் நடிகர் சுரேஷ்கோபி தொடர்ந்து கூடுதல் வாக்குகளுடன் வெற்றி பெறும் நிலையில் உள்ளார்.

மேற்குவங்க மாநிலத்தில் 42 தொகுதிகளில் திரிணாமுல் காங்கிரஸ் 31 இடங்களிலும்,

பிஜேபி 10 இடங்களிலும்,

காங்கிரஸ் 1 இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

ஜார்கண்டில் மொத்தமுள்ள 14 தொகுதிகளில்

பிஜேபி 9 இடங்களிலும்

ஜார்கண்ட் முக்தி மோர்சா, காங்கிரஸ் தலா 2 இடங்களிலும்,

அனைத்து ஜார்கண்ட் மாணவர் சங்கம் 1 இடத்திலும் முன்னிலை வகிக்கின்றன.

ஒடிஷாவில் மொத்தமுள்ள 21 மக்களவை தொகுதியில்

பிஜேபி 19 இடங்களிலும்,

பிஜு ஜனதாதள் மற்றும் காங்கிரஸ் தலா 1 இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

ழூழூழூழூழூழூழூழூ

சட்டப்பேரவை தேர்தல்

ஆந்திர மாநில சட்டப்பேரவை தேர்தலில் மொத்தமுள்ள 175 இடங்களில் தெலுங்குதேசம் கட்சி 133 இடங்களில் முன்னிலை பெற்று அறுதி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்கும் நிலையில் உள்ளது.

ஜனசேனா கட்சி 20 இடங்களையும்

லுளுசு காங்கிரஸ் 18 இடங்களையும்

பிஜேபி 7 இடங்களையும் கைப்பற்றியுள்ளன.

ஒடிசா மாநிலத்தில் 147 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பிஜேபி 73 இடங்களிலும்

பிஜு ஜனதாதள் 57 இடங்களிலும்

காங்கிரஸ் 15 இடங்களிலும்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 1 இடத்திலும்,

சுயேட்சை 1 இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

ஆட்சி அமைக்க 74 இடங்கள் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

ழுழுழுழுழுழுழுழுழு

தமிழ்நாடு

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 39 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில்

திமுக தலைமையிலான கூட்டணி பெரும்பாலான இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

திமுக கூட்டணி 37 இடங்களிலும்

அஇஅதிமுக கூட்டணி, பிஜேபி கூட்டணி தலா 1 இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

மத்திய சென்னையில் திமுக வேட்பாளர் தயாநிதி மாறன்,

தென் சென்னையில் தமிழச்சி தங்கபாண்டியன்

வட சென்னையில் கலாநிதி வீராசாமி முன்னிலையில் உள்ளனர்.

வேலூரில் திமுக வேட்பாளர் கதிர் ஆனந்த்,

அரக்கோணத்தில் திமுகவின் ஜகத்ரட்சகன்,

காஞ்சிபுரத்தில் திமுக வேட்பாளர் செல்வம், முன்னிலையில் உள்ளனர்.

திருச்சியில் மதிமுக வேட்பாளர் துரைவைகோ முன்னிலை வகித்து வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

திருவள்ளூர் தனி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் சசிகாந்த் தொடர்ந்து முன்னிலை வகித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ஸ்ரீபெரும்புதூரில் திமுகவின் திரு. டி.ஆர்.பாலு முன்னிலையில் உள்ளார்.

கிருஷ்ணகிரியில் காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத்,

திருவண்ணாமலையில் திமுகவின் அண்ணாதுரை

விழுப்புரத்தில் விடுதலை சிறுத்தை கட்சி வேட்பாளர் ரவிக்குமார்,

கள்ளக்குறிச்சியில் திமுகவின் மலையரசன்,

சேலத்தில் திமுகவின் செல்வ கணபதி,

நாமக்கல்லில் திமுகவின் மாதேஷ்வரன்

ஈரோடில் திமுகவின் பிரகாஷ் ஆகியோர் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றனர்.

தர்மபுரியில் பிஜேபி கூட்டணியில் போட்டியிட்ட பா.ம.க வேட்பாளர் சௌமியா அன்புமணி தொடர்ந்து முன்னிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

திருப்பூரில் திமுக கூட்டணியில் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சுப்பராயன்,

நீலிகிரி தனி தொகுதியில் ஆ.ராசா, ஆகியோர் முன்னிலையில் உள்ளனர்.

நீலகிரி தொகுதியில் மத்திய அமைச்சரும் பிஜேபி வேட்பாளருமான டாக்டர் எல்.முருகன் பின்தங்கியுள்ளார்.

கோவையில் திமுகவின் கணபதி ராஜ்குமார் தமக்கு அடுத்தபடியாக வந்த பிஜேபி வேட்பாளர் அண்ணாமலையை விட கூடுதல் வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார்.

பொள்ளாச்சியில் திமுக வேட்பாளர் ஈஸ்வரசாமி,

திண்டுக்கல்லில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சச்சிதானந்தம்,

கரூரில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஜோதிமணி

பெரம்பலூரில் திமுக வேட்பாளர் அருண் நேரு ஆகியோர் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றனர்.

கடலூரில் காங்கிரஸ் வேட்பாளர் எம்.கே.விஷ்ணுபிரசாத்

சிதம்பரம் தனி தொகுதியில் விடுதலை சிறுத்தை கட்சி வேட்பாளர் திரு.தொல் திருமாவளவன்,

மயிலாடுதுறையில் காங்கிரஸ் வேட்பாளர் ஆர்.சுதா

நாகப்பட்டிணம் தனி தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் செல்வராஜ்

தஞ்சாவூரில் திமுகவின் முரசொலி

சிவகங்கையில் காங்கிரஸ் வேட்பாளர் கார்த்தி சிதம்பரம்

மதுரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ் வேட்பாளர் வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் உள்ளனர்.'

தேனியில் திமுக வேட்பாளர் தங்க தமிழ் செல்வன் தொடர்ந்து முன்னிலை வகித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

விருதுநகரில் அஇஅதிமுக கூட்டணியில் போட்டியிட்ட தே.மு.தி.க வேட்பாளர் விஜய பிரபாகரன் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார்.

ராமநாதபுரத்தில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் நவாஸ் கனியும்,

தூத்துகுடியில் திமுக வேட்பாளர் கனிமொழி

தென்காசியில் திமுக வேட்பாளர் ராணி ஸ்ரீ குமார்

திருநெல்வேலியில் காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் ஆகியோர் முன்னிலையில் உள்ளனர்.

கன்னியாகுமரி மக்களவை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் விஜய் வசந்த் தமக்கு அடுத்தபடியாக உள்ள பிஜேபி வேட்பாளர் பொன்ராதாகிருஷ்ணனை காட்டிலும் கூடுதல் வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் தாரகை கட்பட் முன்னிலை வகித்து வருகிறார்.

புதுச்சேரி மக்களவை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் வைத்தியலிங்கம் பிஜேபி வேட்பாளர் நமச்சிவாயத்தை விட அதிக வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழு

சட்டப்பேரவை இடைத்தேர்தல்

நாடுமுழுவதும் சட்டப்பேரவை இடைத்தேர்தல் நடைபெற்ற 25 தொகுதிகளில் பிஜேபி 14 தொகுதிகளிலும்,

காங்கிரஸ் 7 தொகுதிகளிலும் முன்னிலையில் உள்ளன.

சமாஜ்வாடி

திரிணாமுல் காங்கிரஸ்

இந்திய கம்யூனிஸ்ட்

ஜார்கண்ட் முக்தி மோர்சா தலா 1 இடத்திலும் முன்னிலையில் உள்ளன.

ழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் தேனி, திண்டுக்கல், திருப்பூர், கோவை, நீலகிரி, திருவண்ணாமலை, திருப்பத்தூர், காஞ்சிபுரம், வேலூர், ராணிப்பேட்டை, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழு

பேட்மிட்டன்

ஜகார்த்தாவில் நடைபெறும் இந்தோனேஷிய ஓப்பன் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் லக்ஷயா சென் முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் லக்ஷயா சென் - ஜப்பானின் சுனேயாமாவை 21-12, 21-17, எனும் நேர் செட்களில் வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் ஹெச்.எஸ். பிரணாய் - பிரியான்ஷு ரஜாவத்துடன் மோதவுள்ளார்.

மகளிர் இரட்டையர் முதல் சுற்றில் ட்ரீஸா ஜாலி - காயத்ரி கோபிசந்த் இணை இன்று களமிறங்குகிறது.

ழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழு